முருகப்பெருமான் துணை

**மகான் தொண்டரடிபொடி ஆழ்வார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

18.06.2021, வெள்ளிக்கிழமை

1. அவதார ஞான சூட்சுமமே
அண்ணலாய் வந்த ஆறுமுகமே
புவனம் தரும பலம் அடைய
புண்ணிய வழி காட்டும் ஞானியே
2. ஞானியே ஆறுமுக அரங்கனே
ஞாலமதில் உன் பெருமைகூறி
இனிமைபட யோகபிரசன்ன ஆசி
இயம்பிடுவேன் பிலவ மிதுன திங்கள்
3. திங்களிலே சதுர்திகதி புகர்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 4ம் நாள், 18.06.2021 வெள்ளிக்கிழமை)
தேசிகன் கேட்க தொண்டரடிபொடியாழ்வாரும்
ஓங்காரஉலகம் அமைய உரைப்பேன்
ஓங்கார குடில் படைத்து அருளும்
4. அருளும் அரங்கன் மலரடி
அணிவகுத்து வணங்கி மக்கள்
அருளும் ஆசியும் பெற்றுவர
ஆபத்தில்லா நல்வாழ்வாக மாறும்
5. மாறுதலை செய்து காத்திடும்
மகா சக்தியாக வந்தஞானி
ஆறுதலும் தீட்சை பலமும்
அடைந்த மக்கள் எல்லாம்
6. மக்களெல்லாம் மரணம் வென்று
மறுமைதனை நீக்கும் பலமும்
ஆக்கமும் சர்வ சக்தியும்
அரங்கன் ஆசியால் அடைவர்
7. அடையவே அறம் எனும் சக்தி
அன்னதான சேவையாக இயங்கி
தடையின்றி உலகை சுற்றிவர
தவசியரின் தருமபலம் கொண்டவர்கள்
8. கொண்டதொரு தொண்டும் செய்து
குருவின் முழு தயவு பெற்றவர்கள்
கொண்டிடுவர் ஞானவான் நிலை
குவலயத்தை மாற்றுகின்ற பலமும்
9. பலமும் பரிபக்குவம் எனும் திடமும்
பணிவால் கண்டு உலகோர்
வளமும் கடைத்தேற்றமும் பெறுவர்
வள்ளலே எனும் சரணடைவு கண்டு

10. கண்டுமே சித்தம் தெளிவிக்கும்
கந்தப்பெருமான் ஞான நெறி
தொண்டுவழி ஏற்றுத் தொடர
தொண்டர்களாகி வரம் பெற

11. வரம்பெற வையகம் மாறும்
வறுமை சகல சோடைகளும் விலகி
தரமான ஞான ஆட்சிக் காலம்
தரணிகண்டிடும் அரங்கன் வழி

யோகபிரசன்ன ஆசி முற்றே

—சுபம்—